செய்தித் தாளாகப் பதிவுபெற்றது | வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஞூ கார்த்திகைமீ விசு-உ வெள்ளிக்கிழமை (12 - 12 - 1975) [இலை: ந.சு

### பண்டிதமணி அவர்களுக்குப்

## பணிவான வேண்டுகோள்

### பண்டிதமணியைப் பாரதநாடு வழிபார்க்கின்றது



நாவலர் பெருமான் கற்பணியை நயந்து வந்த தாயகம் அன்னாரின் நன்னய மாணாக்கர் பரம்பரை வழித் தோன்றல் பண்டிதமணியைக் கண்டுகளிக்கக் கலந்துரை மகிழ நோக்குகின்றது.

சிறப்பாகச் சிதம்பரத் தெய்வபுரத்தில் நாவலர் நற்சேவை நினைவுச் சின்னமாய் விளங்கும் உயர்நிலைப் பள்ளியானது அதனை நிறுவியவர் நெறிநின்று முறை முறை நாவலர் நீதி ஓதியும உவந்தும் அவ்வழி ஒழுகியும நாவலர் பணி போற்றித் தொடர்ந்தாற்றும் தொண்டர் குழாத்தின் தலைசிறந்த சால்புடைய பண்டிதமணியின் கற்கண்டனைய சொல்லமுதைத் தித்தித்தனுபவிக்க நாடுகின்றது.

பண்டிதமணி அவர்களை இப்பணியை இயற்றுமாறு நாவலர் வழி நெறியாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

---

உ

### யாழ்ப்பாணம் - சைவ பரிபாலன சபை

### சித்தாந்த பரீட்சைகள் - 1975

நடைபெறுங் காலம்: 26-12-75 வெள்ளி
27-12-75 சனி
28-12-75 ஞாயிறு

இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம் 35, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்குப் பிரவேசச் சீட்டும் நேரசூசியும் 15-12-75 க்கு முன் அனுப்பப் பெறும். கிடைக்காதவர் தொடர்பு கொள்ளவும்.

450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
11-12-75

வ. கந்தசாமி
தேர்வுச் செயலாளர்

---

### யாழ். வளாகத்திலே விரிவுரைகள்

யாழ். வளாக மனிதப் பண்பியற்பீடம், பொதுத்தராதரப்பத்திர உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கு 1976 தை தொடக்கம் வாரம் தோறும் சனிக்கிழமைகளில் இலங்கையின் கலாசசார பாரம்பரியம் பற்றிய தொடர் விரிவுரைகளை நடத்துதற்கு ஒழுங்கு செய்துள்ளது, இவ்விரிவுரைகள் திருநெல்வேலியிலுள்ள வளாகத்திலே நடைபெறும். 10ம், 11ம் வகுப்புகளிற்கு 'இலங்கையின் கலாச்சார பாரம்பரியமும், சமூக - பொருளாதாரச் சூழலும்' கற்பிக்கும் ஆசிரியர்களுககு உதவுமுகமாகவே, மேற்படி விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பாடம் கலை மாணவர்களுககு மட்டுமன்றி விஞ்ஞான மாணவர்களுக்கும கட்டாய பாடம் என்பது குறிப்பிடற்பாலது.

### இந்து மாணவர் சங்கம்

யாழ். வளாக இந்து மாணவர் சங்கத்தின் முதலாவது கூட்டம் கார்த்திகை 7ம் தேதி திருநெல்வேலியிலே நடைபெற்றது. சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் உரையாற்றினர். இதன்

---

உ

திருச்சிற்றம்பலம்:

போற்றி யருளுகநின்
ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின்
அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு
மீறு மிணையடிகள்
போற்றிமா லுன்முகனுங்
காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட்
கொண்டருளும் பொன்
மலர்கள்
போற்றியா மார்கழி நீ
ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்:

— மணிவாசகர்.

---

### நல்லை. ஆதீனத்திற்கு

## தாயகத்திற் பாராட்டு

நல்லைக் குருமணி அவர்களுக்கு தமிழக ஆதீனங்கள் வரவேற்புமபாராட்டும் அளித்துக் கௌரவித்தன. அண்மையில் தமிழகம் சென்ற பரமாசாரிய சுவாமிகள் 6-12-75 இல் ஈழந் திரும்பியுள்ளார்கள் நமது பரமாசாரிய சுவாமிகளுக்கு மெய்கண்டார் ஆதீன சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமதுவாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்கள். விரைவில் நல்லை ஆதீனத்தின் அழைப்பை ஏற்று ஈழத்துக்குவிஜயம்செய்யவுள்ளார்கள், தருமை ஆதீன குருமகா சந்நிதானம் நமது சுவாமிகளை ஆதீனத்திலும், தேவாலயத்திலும் பொன்னுடை போர்த்துக் கௌரவித்து சுமார் ஒரு மணி நேரம் உரையாடினுர்கள், திருக்கடவூர், திருநள்ளாறு காரைக்கால் ஆகிய தலங்களுக்கும்சுவாமிகள் சென்று தரிசிக்க ஆவன செய்தார்கள். திருக்கடவூரில் இரு சந்நிதானங்களும் சோமவார தரிசனம்செய்தபோது தருமைக் குருமணி அவர்கள் நமதுசுவாமிகளுக்கு காலசம்கார மூர்த்தி சந்நிதியில் வைத்து பொன்னுடை போர்த்துக் கௌரவித்தார்கள். நமது சுவாமிகளும் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்து பட்டுக் குடை ஒன்றை ஆதீனத்துக்கு அன்பளிப்புச்செய்தார்கள். இரு சந்நிதானங்களின் சந்திப்பின்போது நிகழ்ந்த உரையாடலை அடுத்த வார இதழில் காண்க. (ந நி.)

---

# சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம்

## நூலகத் திறப்பு விழாச் சிறப்பு நிகழ்ச்சி



சைவசீலர் செந்தில் நாதன் அவர்கள் இந்துசாதன ஆசிரியர் 1959ம் ஆண்டு அமெரிக்க பயணம் முடித்து மலேசியா சென்றபொழுது மாபெரும வரவேற்பளித்துப் பதினைந்து பகிரங்கக் கூட்டங்களில் சைவ பரிபாலன சபையையும், இந்துசாதனத்தையும் கௌரவித்தமையை மீண்டும் நினைவுக்கழைக் கின்றோம். சிலாங்கூர் சைவ சங்கத்தின் தலைவராகப் பன்னெடுங்காலம் பெரும் பணியாற்றிய நாதன் அவர்கள் ஈழநாட்டுக்கு ஏற்ற புகழ் ஈட்டியிருக்கின்றனர்.

சென்ற ஐப்பசித் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை மாலை சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்க நூலகத் திறப்பு விழாவும் முன்னுள் சங்கப் பெருந்தொண்டராகி இவ்வுலக வாழ்வு நீத்த திரு. ஆ. செவ்வந்திநாதன் உருவப்படத் திரை நீக்கமும் சிறப்பாக நடைபெற்றன.

மாண்புமிகு தொடர்புத்துறை அமைச்சர் டான் ஸ்ரீடத்தோ (Dato) வெ மாணிக்கவாசகம் அவர்கள் அதிகார பூர்வமாகத் திறப்பு நிகழ்ச்சியை உருக்கமான உரை ஆற்றித் தொடக்கி வைத்தனர்.

திரு. செவ்வந்திநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டித் திரு. ஆ. தம்பையா அவர்கள் கூறும் பொழுது,

பின் சங்க நிருவாகக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். திரு. கே. கணேந்திரன் தலைவராகவும், திரு. கே. கனகராஜா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் சங்கத்தின் பெருந்தனுதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் திருவாளர் நெல்லிநாதபிள்ளை ஆறுமுகம் உபாத்தியாரின் மூத்த மகனாகப்பிறந்த இவர் இளமையில் மலாயா நாட்டிற்கு வந்து சில வருடங்கள் தொடர்ந்து கல்வி கற்றபின் அரசாங்க உத்தியோகததில் அமர்ந்து ஏறக்குறைய 45 வருடங்கள் வசித்தார்கள். யாழ்ப்பாணம் நல்லூரில் தோன்றிய தவப் புதல்வர் ஆறுமுக நாவலர் பெருமானின் அரும் சுவட்டுகளைப் பின்பற்றும் பெருங் குணம் படைத்தவராகையால் இயல்பாக சைவசமயப்பற்றும் தமிழ்ப்பற்றும் அமைந்திருந்தது இவ்விரண்டையும் இந்த மலாயா நாட்டில் முன்னேற்றம் அடையச்செய்ய உழைந்தவர்களில் முன்னணியிலுள்ள பெரியார்

(வளர்ச்சி 2ம் பக்கம்)

---

### திரு. கு. அம்பலவாண பிள்ளை பிரிவு

சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரின் சிரேஷ்ட புதல்வனும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னைநாள் ஆசிரியருமாகிய திரு. கு. அம்பலவாணபிள்ளை காலமானர்.

### பயன் தரு தென்னை

அதிக பயன்தரும் தென்னம் பிள்ளைகள் ரூபா ஒன்று வீதம் விற்பனையாகின்றன. அது மிகக் குறைந்த காலத்தில் காய்க்கும் இனமாகும். இதனை வழங்குபவர்கள் மில்க் வைற் தாபனத்தினராகும்.

### கலாநிதிப் பட்டங்களுக்கான ஆய்வுகள்

யாழ். வளாகம் தொடங்கி ஓராண்டு மட்டுமே கழிந்துவிட்டாலும், மேலதிகாரிகள் வளாகத் தலைவர், பீடத் தலைவர். பேராசிரியர் முதலியோரின் முயற்சிகளினுலே முதற்பட்டப்படிப்புக்கு அப்பால் நடைபெறும். முதுகலைமாணி, கலாநிதிப்பட்டங்களுக்கான ஆய்வுகள் தொடங்க உள்ளன. இவற்றிற்கான விண்ணப்பங்கள் அண்மையிலே கோரப் பட்டுள்ளன. இவற்றிற்கு பல ஆய்வு மாணவர் விண்ணப்பித்துள்ளதாக அறியப்படுகின்றது.

---

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர் கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷதவூல கார்த்திகைமீ உசஉ-உ வெள்ளி

# மணிவாசகர் திருவாய்மொழி

திருமுறைத் திருவமுதத்தினது தித்திப்பெல்லாம் ஒருவகைத்தெனினும் எதொன்றை அருந்தும் அவ்வப் பொழுது அதுவே பெரு விருந்தென்னும் இன்பத்தை நாம் எய்துகின்றோம்.

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளின் தேவாரத்தை நாவார நயக்கும்பொழுதெல்லாம் ஆராவமுதிதுவே யென்றெண்ணுகின்றேம்.

திருநாவுக்கரச நாயனரின் திருத்தாண்டகம் திருவிருத்தம் முதலியனவற்றை ஓதுந்தொறும் உள்ளத் துவகை உந்த இதுவே எமக்கு விதியாம் என மனங் களிப்பெய்துகின்றனம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருமுறைகளைச் சுவைக்குங்காற் சிந்தனை அவற்றின் மேலேயே யமைந்து என்னே இவ்வானந்தமென இறும்பூதடைகின்றேம்.

மாணிக்கவாசக அடியார் அருளிய திருவாசகத்தைத் தெவிட்டாத இன்பத் தேனைப் பருகிப் பெருமிதங்கொள்கின்றோம்.

இவ் வுணர்ச்சி திருமுறைகளுக்கியல்பாய் இயைந்த தெய்விகச் செம்மையாமென்க, எனவே பேரின்பப் பெரும பேற்றை நினைக்க வைக்கும் திருமுறைகள் யாவற்றையும் ஒரே அமையத்திற் பாராயணம் செய்வதிலும் பார்க்க ஒரோருகால் ஒவ்வொன்றையும் உள்ளத்தமைக்கும்பொழுது எழுங் கனிவோ நனி சுவை நயக்கும் என்பது அனுபவப் பேறாகும்.

இவ் வகையிலே மார்கழி நீராடல் வைபவத்தியைந்த திருவெம்பாவைத் திருநாட்களில் மணிவாசகத்தை மணி மணியாக வைகறைப்பொழுதில் மடவார் பாட மற்றையோர் செவி மடுப்ப உதிக்கும் இன்ப உணர்ச்சி உள்ளத்தை உண்மைப்பொருள் மீதே படிய வைக்கும் நிகழ்ச்சியாகின்றது.

திருவாசகச் செந்தேனில் ஒரு அணுவளவாம் சொட்டினை இன்னே பருகுவம்,

"விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தோனே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே".

விழுப் பொருளாய் வாழச் செய்பவனாய், களி தரு தேனாய்க், கடலமுதாய்க் கரும்பாய் விரும்பும் அடியார் எண்ணகத்தோனாய் உலகுக் குயிராய் உள்ள எம்பெருமானே! என்றழைக்கும் இன்சுவையை என்னென்றுரைப்பேம்.

இப் பெற்றி வாய்ந்த முப்பொருள் உண்மை விளக்கும் திருமுறையை எப்பொழுதும் பாராயணம் பண்ணுவது சாலச்சிறந்ததெனினும் திருவெம்பாவைப் பொழுதிற் புலர்வதன்முன் புகலும் தவப்பொழுதே மார்கழித் திங்களின் மங்கலச் சீராம்.

மார்கழி நீராடி மண்ணகத்தே வந்து வாழ வைத்த யாண்புக்கு நன்றி செலுத்தி உலகுக்குயிரான தலைவனை வாழ் முதலாகிய பொருளைப் போற்றுவம். போற்றி ஆற்றுவம் புண்ணியப்பயனை.

# ஆலயவழிபாடு

வழக்கம்பறை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் இவ்வாண்டு நடாத்திய சமய அறிவுப் போட்டியில் சிறந்த சட்டுரையாக தெரிவு செய்யப்பெற்ற கொல்லங்கலட்டியைச் சேர்ந்த செல்வி ரதி சிற்றப்பலத்தின் ஆலயவழிபாடு என்னும் கட்டுரை இங்கே பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

கோயில் இல்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம் என்றும் ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்றும், திருக்கோயில் இல்லாத ஊர் காடு என்றும் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே என மெய்கண்டதேவரும்; திருக்கோயில் உள்ளிருக்கும் திருவுருவந் தன்னைச் சிவனெனவே நினைந்தவர்குச் சிவனுறைவான் அங்கே என அருணந்தி சிவாசாரியாரும் அருளியுள்ளார்கள். சிவாலயம் சிவமயமானது என்பர் ஈசான குருதேவர்.

எங்கும் பரந்துள்ள இறைவன் ஆலயங்களில் சாந்நித்தியங்கொண்டு எழுந்தருளி அருள் புரிவர் என்பது ஆகமங்கள் கண்ட முடிபு; நாயன்மார் முதலாய பெரியார்கள் நமக்கு வழங்கியுள்ள அநுபவமுமாம். ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயிக்கும் இடம் என்பதும் கோயில் என்பது தலைவராய பதி உறையும் இடம் என்பதும் கருததாகும்.

ஆன்மாக்களைப் பந்தபாசங்களில் இருந்தும் நீக்கி மேலான நிலையில் இருததிதற் பொருட்டே இறைவன் மூர்த்தி, தலம், தீர்த்தம என விளங்கும் மூவகை வடிவில் எழுந்தருளியுள்ளார். அங்ஙனம் அவர் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் எண்ணில்லா தவை.

சிவபெருமானை முறைப்படி வழிபட்டு வணங்குவதால அச்சம், அல்லல், இடர், இடுக்கண், கவலை, கேடு, நோய், பகை, பழி பீடை முதலானவை நம்மைப் பீடிக்காது விலகிப் போய்விடும என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளியுள்ளார் ஆலயவழிபாட்டினால் அழகு, அன்பு, அதிகாரம், இன்பம், ஈகை, ஐம்புலன்களை வெல்லும் ஆற்றல், கலைமகள் துணை, சித்தி, செல்வம், ஞானம், புகழ், முத்தி முதலானவைகட்டாயமாகக் கிடைக்கும் என ஆணையிட்டு அருளியுள்ளார்.

ஆலய வழிபாட்டினால் வரும் பயன்களைத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருமையாக அருளியுள்ளார். இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களை வலம் வந்து தரிசித்தவர்களை வினைகள் கூடமாட்டா பாவப்பீடிக்கமாட்டாது. இம்மையில் செல்வம் கூடும்

ஆலயத்தில் அமைந்துள்ள கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்பன நம்முடம்பில் அமைந்துள்ள மூலாதாரம், சுவா[illegible] ஆகிய ஆறு ஆதாரங்களைக் குறிப்பனவாகும் இவ் வாறு ஆதாரங்களும் திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்பவற்றினைக் குறிக்கும்.

இறைவன்மீது பக்தியுடன் மலர் தூவுதல் அர்ச்சனை எனப்படும். கறபூரம் வெண்ணிறமானது. அது மூவகைக் குணங்களுள்சாத்துவிகம்என்பதைக் குறிப்பதாகும கற்பூரத்தில் நெருப்புப் பற்றியதும அது சாம்பல் போன்ற எதுவும் எஞ்சாமல் எரிந்து அக்கினி மயமாகி விடுகிறது அங்ஙனமே ஆன்மாவும் ஞானம் என்னும் அக்கினி தன்னைப் பற்றும்போது பசுத்தன்மை முற்றாக நீங்கப் பெற்றுச் சிவத்தன்மைப் பேறு பெறுதல் வேண்டும். கற்பூரம் தன்னுருவம் நீங்கிய தன்மையில் ஆன்மாவும் சிவத்துடன் அத்துவிதமாகக் கலத்தல் வேண்டும் என்பதைக் குறிப்பதாகும.

ஆலய வழிபாட்டினால் வரும பேறுகளைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியுள்ளார். வழிபாட்டினால் உள்ளம் தூய்மைபெறும். புகழ் பெருகும், முன்புசெய்த பாவம் அழிக்கப்படும. உமாதேவியார், முருகப் பெருமான், திருமால், பிரமன் இந்திரன் முதலான தேவர்களே இறைவனை வழிபட்டார்கள். அகத்தியர், மார்க்கண்டேயர் முதலான முனிவர்களே வழிபட்டுய்ந்தார்கள். இவர்களை விட யானை, சிலந்தி, பாம்பு, புலி, குரங்கு முதலிய விலங்குயிரினங்களும் வழிபட்டுய்ந்தன.

ஆலயத்தில் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். நித்தியமும நியமமாக ஆலய வழிபாடு செய்ய இயலாதவர் சோமவாரம், மங்களவாரம், பௌர்ணமி, அமாவாசை, மாதப்பிறப்பு சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசஷ்டி போன்ற புண்ணிய காலங்களிலேனும வழிபாடு செய்தல் வேண்டும்.

## தினமும் அதிகாலை வீதி பஜனை

—0—

திருவெம்பாவைத் திருநாட்களில் (10-12 75 முதல்) யாழ், நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக்கழகத்தினர் அதி காலை 4-00 மணி முதல் திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை வீதி பஜனை நடாத்தி வருகின்றனர். ஸ்ரீ இராஜராசேஸ்வரி - பேய்ச்சியம்பாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி ஆங்கு நிறைவுறும். திருவாதிரைத் திருநாளன்று மணிவாசகப் பெருமான் திரு வீதி ஊர்வலமும் பஜனைப் பூர்த்தி விழாவும் நிகழும்; ஈ. நி.

## சிலாங்கூர்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

களில் ஒருவராவார். பொதுச் சேவைகளை முக்கியமாகத் திருக்கோயிற்பணிகளில் முழு மனத்துடன ஈடுபட்டார்கள். அவர்கள் வசித்த நகரங்களிலுள்ள முருகன் ஆலயங்களில் பரிபாலனச் சேவையில் பங்கு பெற்றுக் கடமைகளைச் செவ்வனே செய்தவர். மலாயா இந்துச யப் பிரசார சபை, தமிழ்பண்ணை இலக்கிய நிறுவனங்களில் காரிய தரிசியாக இருந்து பல தொண்டுகள் புரிந்தார்கள். அக்காலங்களில் இங்கே வருகை தந்திருக்கும அமைச்சர் அவர்கள் இளம்பிராயத்தில் திரு செவ்வந்திநாதன் அவர்களுடன் தொடர்பு கொண்டு இருவரும் பொதுத் தொண்டுகளில் சேர்ந்து ஈடுபட்டார்கள். இந்த நெருங்கிய தொடர்பு கடைசி வரையும் நிலைத்து அன்புத்தொடர்பாக மாறி பல நன்மைகளை விளைத்தது. குறிப்பாக, இந்து மயானம் திருத்தியமைப்பதற்கும் இந்தக் கலாமண்டப வேலைகள் பூர்த்தியடையச் செய்வதற்கும மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருதவிபுரிந்தார்கள்.

இவ்வைபவத்தில் ஓர் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

x x x

எல்லாவற்றுக்கும் மேலாக, அமரர் திரு. செவ்வந்திநாதன் அவர்கள் எங்கள் பொதுத் தேவைகளுக்கு ஓர் மண்டபம் இல்லாத நெடுங்காலமாயிருந்த குறையை நிவர்த்திக்க மிகவும் துணிச்சலுடன் செயலில் இறங்கிப் பல முயற்சிகளை சிரமப்பாராது எடுத்து இந்தப் பெரிய மண்டபத்தை நிறுவியதற்கு கோவில் சங்கமும் சமூகத்தவர்களும் என்றும் கடமைப்பட்டவர்களாயிருக்கவேண்டும். இரண்டு லட்சம் வெள்ளிக்குமேல் பணம் தேவையென்று மதிக்கப்பட்டது. கையில் கால் பங்கு பணமேனும் சேராமுன் கட்டட ஆரம்ப வேலைகளை முடித்து, உடனடியாகத் துணிச்சலுடன் செயலில் இறங்கி 11-12-1968 தேதியில் அடிக்கல் நாட்டும் பெருவிழா எடுத்தார்கள் பின்பு பணமுடை ஏற்பட்டபோம மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம சமூகநலனபிவிருத்தி சபையாரிடமிருந்து முதல் முறை வெள்ளி 50,000ம் நன்கொடைகள் பெற்று சமூகத்தவர்களின் வசூல் பணத்துடன் கட்டடம் நிறைவேறியது.

திரு. செவ்வந்திநாதன் அவர்கள் நினைததனைச் செய்துமுடிக்க வல்லவர். துணிச்சலுடன் செயலாற்றும் கர்மவீரராகப் பணியாற்றி மகத்தான சேவை புரிந்தார் நெடுங்கால நண்பரும நெருக்கடியான வேளையில் பேருதவி புரிந்த மாண்புமிகு அமைச்சர் டான் ஸ்ரீடத்தோ மாணிக்கவாசகம் அவர்களே இன்று வருகை தந்து அமரர் திரு. செவ்வந்திநாதன் அவர்களின் உருவப்படத்தை திரைநீக்கம செய்துவைப்பது சாலப் பொருத்தமாகும். அமரரின் ஆன்மாவும் மேலும் சாந்தியடையும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குரும்பசிட்டி அம்பாள் ஆலயம்

திருவெம்பாவை வருடாந்த உற்சவம்

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் விசேட திருவிழாக்கள் திருவெம்பாவை பத்து நாட்களிலும் (10-12-75—20-12-75) பிரார்த்தனையும், சைவப்பிரசங்கங்களும் தினமும் மாலை 6-30 மணிக்குக்கலைப் பேராசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவெய்தும்.

## அகில இலங்கை இந்து மாமன்றம்

க. பொ. த, தே. த ப பரீட்சைகளில் சைவ சமய பாடத்தில் அதிக புள்ளிகள் பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் பாராட்டிப் பரிசில்கள் வழங்கும்.

இத்திட்டம் எதிர்வரும் மார்கழிப் பரீட்சை முதல் ஆரம்பமாகவுள்ளது. மன்ற முகாமைச் சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வருகின்றது.

## தமிழ் இலக்கிய மன்றம்

கடந்த நவம்பர் மாதம் 21-ம் திகதி யாழ் வளாகத்திலே தமிழ் இலக்கிய மன்றம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது யாழ். வளாக கலை, விஞ்ஞான போதனுபீடத் தலைவர்களான பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் பே. கனக சபாபதி ஆகியோர் மரபு வழி குத்துவிளக்கேற்றி இம் மன்றத்தினைத் தொடக்கிவைத்தனர்.

## எம்பாவை சிறப்புரை

— - 0 - —

பண்ணாகம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு கடந்த 10ம் திகதி புதன்கிழமை தொடக்கம் பண்டிதர் திரு. பொன. அம்பலவாணர் அவர்கள் 'எம்பாவை' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தி வருகின்றார்கள் மாலையில் நடைபெறும் இச்சிறப்புரை 19ம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடரும் இந் நிகழ்ச்சியை வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

## யா. மாவட்ட ஆசிரியர்கள் கடன் வழங்கு சபைத் தேர்தல்

யாழ். மாவட்ட ஆசிரியர் கடன் வழங்கு சபைத் தேர்தல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கை அன்று இரவு எண்ணப்பட்டு முடிவடையாமையால் 14ந்திகதிஞாயிறுகாலைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஆசிரியர்களில் 17 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர். இத்தேர்தலில் 104 பேர் வேட்பாளராவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட மன்றில்

வழ இல: எம் பி 12943

1. சுளிபுரம் அருணாசலம் கதிரவேலு
2. பெண இலட்சுமி - வழக்காளிகள்

எதிராக

1. சங்கானை மேற்கு சங்கானை சின்னையா கதிரமலை
2. பெண் குணத்திலகம் - எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட மன்றின் M B 12943 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1975-ம ஆணடு மார்கழி மாதம் 6ந் திகதி 26-12-75 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபாய் 5512/- க்கு 26-1-72 தொடக்கம் 26-2-73 வரைக்கும் ரூபாய் 3700/- க்கு 9% வட்டியும் அதன் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 350-25

### ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரம் இறை "உடும்பு சிட்டி வயல்" செற்பர. 7 குளி 9, 1/8 யும் கிணறும் பனைகளும இதற்கெல்லை கிழக்கு அம்பலவாணர் வீரகத்திக்குரிய காணி வடக்கு சதாசிவம் பெண பொன்னுப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரிய வாதனம் மேற்கு வயித்திலிங்கம் ஐயாத்துரைக்கும் மாரியமன் கோவிலுக்குமுரிய வாதனங்கள் தெற்கு கந்தையா பெண் சேதிப்பிள்ளைக்குரிய வாதனம் இதடங்கலும ஆறுல கிணற்றில் மறுபேருக்குள்ள பங்கும் ,வளிவாய்க்கால் உரித்தும பிற நீங்கலாக பதிவு E 29'/147

2, ஷை பண்டத்தரிப்பு கோவிற்பற்று, சில்லாலையிறை " ஆதிக்கமானவிடத்தல " நில பர 24 இதில் வடகதப் புறமாக நில பர 12 ம் பனைகள் உடலிகளும இதற்கெல்லை கிழக்கு சுவாமபிள்ளை இன்னாசித்தம்பிக்குரிய காணி வடக்கு சவரிமுத்து லோறன்ஸ்சுக்கு பங்காளருக்குமுரியவாதனம் மேற்கு சுவாம்பிள்ளை இன்னாசித்தம்பிக்குரிய காணி தெற்கு வயிததிலிங்கம் ஐயாத்துரைக்கும் பெண் பாக்கியத்திற்கும இதில சொல்லப்பட்ட மிததிக் காணி இதடங்கலும் பதிவு யாழ்ப்பாணம் E 354/102

3. ஷை பண்டத்தரிப்புக கோவிற்பற்று மாதகல் இறை "கொட்டையடி வழவு" நில. பர. 3 குளி 14½ ம கிணறும வான் பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு முருகேசு கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருககுமுரிய வாதனமும கைஒழுங்கையும வடக்கு கை ஒழுங்கை மேற்கு கைஒழுங்கை தெற்கு கதிரமலை பெண் குணதிலகத்திற்குரிய வாதனம இதடங்கலும் பதிவு யாழ்ப்பாணம E314,57

இ. சு. தர்மரத்தினம்
கொமிசனரும்
விலைமதிப்பாளரும்

46, 3 ம் குறுக்குத்தெரு
யாழப்பாணம்

120 12-12

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: ஈடு 224

காங்கேசன்துறை சின்னையா சோமசுந்தரம் மாம்பிராய் — வழக்காளி

எதிராக

காங்கேசன்துறை நடராசா நாகராசா மாங்கொல்லை — எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 224ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1975ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2625/-ம 5-7-1974 தொடக்கம் 2-2-1975 வரைக்கும் ரூபா 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 369-70

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று பழை இறை "கறண்டாப்பற்றை நில 2 குழி 8 இந்தப் பரப்பு இரண்டு குழி எட்டுக்கு எல்லை கிழக்கு முத்தையா இரத்தினத்தினுதனம் வடக்கு ஆறு அடி அகல ஒழுங்கை மேற்கு ஒழுங்கை தெற்கு சின்னத்தம்பி குருநாதபிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலும் இன்னும் வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
23-11-75 122 12-12

---

## வியப்பூட்டும் சாதனை!



பத்தர்: "உழுந்துச் செய்கையில் ஈடுபட்ட நம் விவசாயி ஒருவர் ஏறத்தாள பதினையாயிரம் ரூபாவரையில் சம்பாதித்திருக்கிறாராம்! இச்செய்தி நம்பமுடியவில்லைப் பாருங்க!

சித்தர்: ஏன் நம்பக்கூடாது! ஒரு புதையல் தட்டிவிட்டார்! நம்ம அரசு தருந்தபடி ஊக்கமும் உதவியும் கொடுக்குமானால் சொல்ல வேண்டுமா? நம்ம விவசாயிகள்வியப்பூட்டி வைத்துவிடுவார்களே...!

" உழுந்து — பயறு விதைக்கணும்
உயர்ந்த செல்வத்தை நிறைக்கணும்
ஓடி ஓடி உழைத்து நாம்
[illegible]
[illegible]
— ! நாயன்மார் - நாதன்!

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வழ. இல. / M B 14307

சிரும்பியடி வண்ணார் பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம்
இளையதம்பி மகள் தையல் முத்து — வழக்காளி

எதிராக

1. வைரவன் வள்ளியப்பாவும்
2, பெண் மாரிமுத்து இருவரும் கலாசாலை வீதி திருநெல்வேலி யாழ்ப்பாணம் - எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/14307-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை1976 ம் ஆண்டு தை மாதம் 26-ம் திகதி (26–1-76) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 1580-00ம் 14-3-74 தொடக்கம் 19-9-74 வரைக்கும் ரூபாய் 1,000-க்கு 12 வீத வட்டியும அதன் பின் முழுத் தொகைக்கும இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 379-60 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு நல்லூர் கோயிற்பற்று திருநெல்வேலி இறை "கனகனபுலம்" பர. நில. இலா, 2 5/8 வானபயிர் செய்பயிர்களும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு தம்பியையாவின் பெண் வளளியம்மாவின் ஆதனம வடக்கு றேமன்கததோலிக்க கோவில் ஆதனம் மேற்கு சந்தியா கதிரனின் ஆதனம தெற்கு வேலன நாதனும பெண் நாகியின் ஆதனம

அ. போ எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்.

14 டேவிட்றோட்
யாழப்பாணம், 21-11-75, 108 28-11

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வழ, இல. எம். பி. 108

வேலனின் கைம்பெண் தெய்வி தையிட்டி காங்கேசன்துறை — வழக்காளி

எதிராக

1. சின்னவன் இராசு அவரது மனைவி
2. சரஸ்வதி இருவரும் மாவிட்டபுரம் — எதிராளிகள்

மல்லாகம நீதிமன்றத்தில் M B 108ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975 ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் திகதி [30-12-1975] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

### தீர்வைத் தொகை

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 750-ம் 18-7-74 தொடக்கம் 26-10-74 வரைக்கும ரூபா 500/- க்கு 10 வீதவட்டியும் அதன பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 62-25

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்ட வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப்பழைக கோவிற்பறறு பளை இறை பெத்துவர் கலட்டி அல்லது வெத்துவக்கலட்டி நில 9ம குளி 4 9/10 யாழ்ப்பாணம மாவட்ட நீதிமன்றத்தின் வழ இல p/14 கோவையில் பதிய பட்டதும எஸ். ஏகாமபரம் உலாந்தாவினால் (இல 73 B) 15-10-1957 ல் தயாரிக்கப்பட்ட உலாந்த படத்தில் சுட்டிக்காட்டப்பட்ட துண்டு 2 A இதில கிழக்கு எல்லையில் நில பர 5ம எல்லை கிழககு சின்னவன் கந்தனதும செல்லத்துரையின மனைவி செல்லம்மாவினது ஆதனமும் கந்தன் முருகனதும பங்குதாரர்களினதும் ஆதனம வடக்கு நாகன் வட்டனதும கொத்தன சின்னக்குட்டியனதும மனைவி தெய்வியினதும் கந்தனின் கைம்பெண் சீதேவியினதும ஆதனங்கள் மேற்கு இந்தக காணியின் மிதுதிப் பாகம ஆறுமுகம செல்லையாவிற்கு சேர்ந்தது தெற்கு ஐயன கந்தனதும் மனைவி அன்னப்பிள்ளையினதும ஆதனமும் துண்டு 7 ல் காட்டப்பட்ட பாலதயும நாகன் வட்டனதும மற்றவாகளினதும் ஆதனமும் அது முழுவதடங்கலும் அதனைச்சார்ந்தவைகளும்

க. சிவஸ்கந்தா
நீதிமன்றவிற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 29-11-75,
121 12-11

---

# விற்பனவு விளம்பரம்

**அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்**

உரிமையாளரின் கேள்விப்படி கீழ்க்காணுமாதன விடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1975 ம் ஆணடு மார்கழி மீ 22-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல 10 மணிககு அக்காணிகதுள நின்று என்னால் பிரசித்த ஏலததில் விற்கப்படும். வாங்குபவர் ரூபா 100/ க்கு மேற்படின முழுததொகையின் நாலில ஒரு பங்கை உடன் கட்டி மிகுதிப்பணததை பதினைந்து நாட்களுக்குள கொடுத்து உறுதி முடித்துக கொளள வேண்டும. விளமபரச்செலவு கொமிஷன செலவு உறுதிச் செலவுகள் யாவும் வாஙகுபவரே பொறுக்கவேணடும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழபபாணம டிஸ்திறிக தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக கோவிறபற்று சாவகச்சேரியிறை குமரன்வளவு அல்லது எருமைப்பட்டிபுலம் நில பர 7 எழுககெல்லை கிழக்கும் வடக்கும ஒழுங்கை மேற்கும தெற்கும தாமு வல்லிபுரத்துககுரிய வாதனம் இவ்வெல்லைக்குட் சேர்ந்த காணிக்குளளிருககும் கிணற்றில தாமு வலலிபுரத்துககுரிய கிணறறுத் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலான மிகுதி யடங்கலிலும் அதைச் சேர்ந்தவைகளினைத்திலுஞ் சொரியலாக நிலப்பரப்பு மூன்று அதாவது சொரியலாக 3/7 பங்கு பதிவு யாழப்பாணம் F 247/187.

மேலும் விபரமறிய விரும்புவோர் சட்டத்தரணி க. கதிர்காமசேகரிடம அறிந்து கொள்ளலாம்,

மு. நா. மார்க்கண்டு ஏலதாரர்

சாவகச்சேரி 1-12-75 119 12-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது,
புழுதியைத் தோண்டினேன், பூசணி பூத்தது,
தொழுது கொண் டோடினர் தோட்டக் குடிகள்.
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.

**I dug up the soil and sowed some brinjal seeds, they sprouted as bitter-gourd plants and (the buds they produced in course of time) blossomed as pumpkin flowers. The garden occupants (got alarmed and) ran away praying (to their favourite deities). The fruits cropped were all plantain fruits.**

Hindu Organ

FRIDAY, DECEMBER 12, 1975

## Prize Books — Priority of Choice

SCHOOLS and colleges have a systematic annual program in the distribution of prizes as the most outstanding event of the year. Reward given as symbol of victory or superiority to student in school or college who excels in attainment is referred to as a prize. The significance of such events would, therefore, demand the choice of rewards to be of a high level. The brilliant achievement of a student being a sure indication of his capabilities, prizes offered for the particular performance must be worth its place in his library But invariably the selection of books for prizes is not made with due thought and a random purchase of miscellaneous publications is often done. It may be, the winner of a prize for Religious studies receiving a trash novel depicting underground life. Hence it becomes necessary that the utmost attention should be devoted to the task of selecting suitable books for prizes.

In this context we would suggest that books on Saiva religion, Tamil language and literature edited or written or published by the Great Navalar would make a fine choice. To add to the list, the books of Srimath Kasi Vasi Senthilnatha Iyer, Sri C. W. Kathiravetpillai, Sri C. W. Thamotharampillai, Sri S. Sivapadasundarampillai, Sir P. Ramanathan, Sir P. Arunachalam, Dr. Ananda K. Cumarasamy, Shri A. Visuvanathan, Sri V. Kanagasabaipillai Sri A. Kumarasamy Pulavar, Bhrama Sri S. Ganesha Iyer, Bhrama Sri Navaneetha Krishna Bharathy, Sri Navalyoor Somasundera Pulavar — to mention prominent names, would ideally serve the purpose. Most of these publications are now out of print as the demand for them has not been such as to induce the putting forward of subsequent editions. The study of the writings of eminent authors would surely stimulate the intellectual leanings of prize winners. We commend this suggestion to the Heads of Colleges and Schools.

Parent Teacher Associations and Saiva organisations would do well to be of assistance to educational institutions in the matter of supplying suitable books on Saiva Literature to schools.

This procedure will help the reprinting of valuable editions of distinguished authors and thus embellish libraries.

# Vedantam and Siddhantam

### A Study of the Svetasvatara Upanishad
### ( By A Science Graduate )

(Continued from the last issue)

And he put forward the the theory that in ancient India there was probably a "common fund of philosophical thought, which like language, belonged to no one in particular but was like the air breathed by every living and thinking man" the common heritage of its people, which these six systems as well as others made full use of according to their needs and that it was rather a hazardous business to attempt to suggest priority or posteriority to one or other of them.

This view boldly put forward by Max Mullar in the last century was however not a new discovery of his, but the rediscovery of an ancient belief given expression to by a good many of our teachers who lived long before him. The averment that the Saiva System and its revealed books, the Vedas and Agamas, constitute the original and are the precursors of various other systems which are often referred to as being six fold, is met with frequently in our Tamil sacred books. The very first verse of Siddhiyar which follows the invocatory song ( காப்பு ) commences with the significant words அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் .... நின்ற சிவனடி ...., the Divine Feet that form the goal or subject-matter discussed and pondered over in all the six systems of religion (and philosophy) — For a brief analysis and exposition of the sixfold groups of Indian philosophical religious sects, the reader is referred to our 'Elements", Chapters XI and XII.

As regards the words Samayam (சமயம்), religion, philosophy, &c it is perhaps necessary that we should remind our readers here that the word *Samayam* which is usually rendered into English as religion connotes something more than religion. It means religion and philosophy blended into one. As well remarked by some oriental scholars of the West, there is no such thing as philosophy in India in the strict sense of the word as understood in the West. Religion there (in the West) is a system of faith, devotion and worship of God which appeals to the heart, while philosophy is a science which tries to explain the various phenomena that we come across in the world, physical, mental, moral or spiritual, by tracing them to their ultimate cause and analysing their *pros* and *cons*, and its aim is to satisfy the head rather than the heart.

( To be continued )

## Lecture on Numismatics

Mr. K. N. V. Sayone F. S. I. delivered an interesting lecture on Ancient Coins, under the auspices of the Jaffna Archaeological Society at the Jaffna Campus, Thirunelvely on the 24th November. He traced the origin of the coin and classified the main types of coins found in Sri Lanka. Among the various types of coins, he claimed to have collected as many as 150 types of coins belonging to the Tamil king Aryacakrawarthy of Jaffna. A lively discussion followed.

## Dance of Siva was Screened at the Jaffna Campus

The Dance of Siva — A documentary depicting the life and work of Dr. Ananda Kentish Coomaraswamy was shown at the Jaffna Campus on the 25th November, under the auspices of the Film Society, Jaffna Campus.

Four other short documentaries were shown. Along with that the Dance of Siva was preferred by the U. S. I. S. and is shown in various parts of Sri Lanka.

# Most Remarkable Munificence

### Philanthropy of Patriot Sir Ramanathan

On the occasion of the observance of Ramanathan Day on Sunday December 7. Prof A. Sinnathamby paid a glowing tribute to the services of the most outstanding patriot of Sri Lanka Sir Ponnambalam Ramanathan and observed that the mighty institutions — Ramanathan College and Parameshwara College — constituted by themselves a nucleus for the promotion of higher education in this country.

Speaking further Professor Sinnathamby referred to the religious fervour of Sir Ramanathan and his passion for the propagation of Hindu Religion and the promotion of the study of Tamil Literature. The great shrines, one at Kochikade, the other at Kodaikanal and those in the premises of Ramanathan and Parameshwara Colleges, the Professor added, were a lasting gift to the people of this country. Concluding his tribute, the Professor said above all the establishment of the Jaffna Campus in the premises of Parameshwara College was a spectacular achievement in recognition of the large-hearted patriotism of Sir Ramanathan.

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-12-1974 with Mr. M. K. Sabaratnam of Kandy Road, Kilinochchi on Friday 26-12-1975 commencing at 10 a. m. at the said pawn shop

S Mahadevan.
Auctioneer

643, K. K. S. Road,
Jaffna.

(34 5 & 12).

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday December 12, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKAMS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org